Ts12T

12415

# தென்காசி மாவட்டம்

## முதல் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 12

கால அளவு: 1.30 மணிநேரம் **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 45

பகுதி - I

9×1=9

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

1) சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி

இ) சூரிய நிழல் ஈ) பூஜ்ஜியங்களின் சங்கிலி

2) 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' என்ற பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல்

அ) ஐங்குறுநூறு ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) நற்றிணை

3) வையமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி

இ) திணைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

4) 'உவா உறவந்து கூடும்

உடுபதி, இரவி ஒத்தார்' - யார் யார்?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன் - குகன்

இ) இராமன் - சுக்ரீவன் ஈ) இராமன் - சவரி

5) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சுதல்

6) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

7) தமிழில் திணைப்பாகுபாடு .................. அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

8) இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பெருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

9) பிழையான தொடரைக் கண்டறிக

அ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது

ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்

இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

ஈ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி - II

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** **4×2=8**

10) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
11) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
12) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
13) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?
14) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
15) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

## பகுதி - III

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.** **4×4=16**

16) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
17) வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
18) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.
19) சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை விளக்குக.
20) தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
21) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

## பகுதி - IV

**IV. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக.** **1×6=6**

22) அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

**(அல்லது)**

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்து ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி - V

**V. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4+2=6**

23) அ) 'ஓங்கலிடை வந்து' எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'வரும்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com